Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 339 31.03.2001 சனிக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

உங்களுக்கு தேவையான
உத்தரவாதமுள்ள
தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்
உமையாள்
ஜீவல் ஹவுஸ்
மார்க்கட் ரோட், பட்டிருப்பு -
களுவாஞ்சிக்குடி, Advt.



( கிழக்குப்பல்கலைக்கழகத்தில் நேற்று நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தில்இடம் பெற்ற நிகழ்வுகளைக் காண்கின்றீர்கள்)

# மன்னார் சம்பவத்தை எதிர்த்தும் பெண்கள் அமைப்புக்களை கண்டித்தும்

## கிழக்குப்பல்கலைக்கழக சமூகம் மறியல் போர்

(நமது நிருபர்)

**மன்னார் மாவட்ட உப்புக்குளத்திலுள்ள விடுதியில் தங்கியிருந்த இரு பெண்கள் மீது கடந்த ஞாயிறன்று (18.03.2001) பாலியல் பலாத்காரம் புரியப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று மதியம் கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தினர் மறியல் போராட்டமொன்றை நடத்தினர்.**

பிற்பகல் 1:30 மணியளவில் பல்கலைக்கழக முன்றலில் நடைபெற்ற இந்தப்போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களுடன் உலக நாடகதின விழாவைக்காண வந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு கோஷங்களை எழுப்பினர்.

மகளிர் அமைப்புக்கள் தூக்கமா? ஆர்ப்பாட்டத்தின் போது "மகளிர் அமைப்புக்களே. இன்னும் தூக்கமா'' என்ற கோஷம் பரவலாக எழுப்பப்பட்டது. இச்சம்பவம் நடைபெற்ற 10 நாட்களுக்கு மேலாகியும் மன்னார் ஆயரையும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரையும் தவிர, வேறு எவரும் குறிப்பாக மகளிர் அமைப்புக்கள் எவையும் எதிர்ப்போ, கண்டனமோ தெரிவிக்காததையிட்டு கடும் கண்டனம்

(8ம்பக்கம் பார்க்க)

## யாழ் செய்தியாளர் திருச்செல்வம் விடுதலை!

(கொழும்பு நிருபர்)

சந்தேககந்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம

(8ம்பக்கம் பார்க்க)

## ஓட்டமாவடியில் ஆர்ப்பாட்டப் பேரணி!

(ஏறாவூர் நிருபர்)

ஓட்டமாவடி பிரதேச முஸ்லிம்கள் நேற்று வெள்ளிக்கிழமை கூட்டுத் தொழுகையின் பின்னர் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

"கல்குடா டுடே" என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள செய்தி மடலில் பிரதியமைச்சர் முகைதீன் அப்துல்காதரை விமர்சித்துள்ளதைக் கண்டித்து இப் பேரணி நடாத்தப்பட்டது.

ஓட்டமாவடி ஜு"ம் ஆப் பள்ளவாசல் முன்றலில் ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டப்பேரணி சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள பாலத்திற்கருகில் முடிவடைந்தது.

(8ம்பக்கம் பார்க்க)

## அடக்கம் செய்யப்பட்ட சடலம் பொலிஸ் விசாரணைக்கு எடுத்துச்செல்லப்பட்டது!

(நமது நிருபர்)

சந்திவெளியில் உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்ட சடலம் நேற்று மாலை ஏறாவூர் பொலிசாரால் தோண்டி எடுக்கப் பட்டு ஏறாவூர் மாவட்ட வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை சந்திவெளியைச் சேர்ந்த குடும்பஸ்த்தரான அகிலன் என்பவர் இனம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் இவரது சடலம் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை சந்திவெளியில் கட்டெடுக்கப்பட்டு அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நேற்று பிற்பகல் அடக்கம் செய்யப்பட்டது.

ஆனால் மரண விசாரணை, வைத்திய பரிசோதனை நடத்தாத காரணத்தினால் நேற்று மாலை அங்கு வந்த பொலிசாரும் இராணுவத்தினரும் பொதுமக்கள் உதவியுடன் புதைக்கப்பட்ட சடலத்தை தோண்டி எடுத்து ஏறாவூர் மாவட்ட வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர்.

## பார்வையாளர்களை வெகுவாய்க் கவர்ந்த நுண்கலைத்துறையினரின் "இராவணேசன்"

(நமது நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரால் நடாத்தப்பட்டு வரும் உலக நாடக தினவிழாவில் இறுதி நாளான நேற்று நுண்கலைத்துறையினர் தயாரித்த ''இராவணேசன்'' வடமோடி நாடகம் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெற்றது.

நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் மௌனகுருவினால் எழுதப்பட்டு நெறிப்படுத்தப்பட்ட மேற்படி நாடகத்தில் நுண்கலைத்துறை விரிவுரையாளர்கள், மாணவர்களுடன் மட்டக்களப்பு மாவட்ட அரச உத்தியோகத்தர்கள் சிலரும் பங்கேற்று நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த முப்பது

(8ம்பக்கம் பார்க்க)



வெளிநாட்டு வேலை வாய்ப்பு

✔ அலுமினியம் ப்ரிகேட்டர்
✔ அலுமினியம் பிட்டர்
✔ அலுமினியம் இன்ஸ்டொலர்

மற்றும் வீட்டுப்பணிப் பெண்களுக்கு உடனடி வேலை வாய்ப்பு முற்றிலும் இலவசமாக.

நியூபாஹிம் என்டர் பிரைஸஸ்
283/1, மெயின் வீதி,
புறக்கோட்டை
L.L.NO: 736

காத்தான்குடியில் விமான பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

நியூபாஹிம் என்டப்பிரைஸஸ
இல:151, 1/1, பிரதான வீதி,
காத்தான்குடி -02
065-47090 ADVT.

எண்ணம் ஓவியம்

[illegible]தியமைச்சருக்காக காத்திருக்கும் மட்டு வின்சன் கல்லூரி விளையாட்டு விழா

-செய்தி-



அவருக்குத்தான் விளையாட்டுப் போட்டி போல அந்த மனிசன் கையை உயர்த்திப்போட்டு வருமட்டும் இந்த பொடிச்சுகள் காத்துக்கிடக்கட்டும்.....

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## யாரால் முடியும்?

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த தெய்வ நாயகம் என்பவர் கட மையிலிருந்த சமயத்தில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு எட்டு மாதங்கள் தடுப்புக் காவலிலும் விளக்க மறியலிலும் வைக்கப்பட்டிருந்தார்.

1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பதினைந்தாம் திகதி கைது செய்யப்பட்ட இவர் 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பதினைந்தாம் திகதி பிணையில் விடப்பட்டிருந்தார்.

1998 ஆம் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்ட போது அவருடைய நாட் குறிப்பில் தெய்வ நாயகத்தின் தொலைபேசி இலகக்கம் இருந்ததெனக் கூறி பயங் கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் பயங்கரவாதத் தடைச் சட் டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் ஆறாவது மாடியி லும் வெலிக்கடைச் சிறையிலும் இவர் தடுத்து வைக்கப் பட்டிருந்தார். சட்ட மா அதிபரின் பணிப்புரைக்கமைய 1999 மார்ச் மாதம் இவர் நீதிமன்றத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டார்..

இரண்டாயிரமாமாண்டு ஒக்டோபர் மாதம் மேல் நீதிமன் றத்தில் சட்ட மா அதிபர் திணைக்களம் இவர் மீது வழக்கொன் றைத் தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கை விசாரித்துவந்த மேல் நீதிமன்ற நீதிய ரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா இவர் மீதான குற்றச் சாட்டு களுக்கு ஆதாரம் எதுவுமில்லை என்பதால் கடந்த புதன்கிழமை வழக் கைத் தள்ளுபடி செய்து தெய்வநாயகத்தை விடுதலை செய்தார்.

கொழும்பு மாநகர சபை மைதானத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா கலந்து கொண்ட கூட்டத்தில் நடந்த குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத் தின் மீது மட்டக்களப்பில் 1999 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட் டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த கந்தப்பன் மாரிமுத்து மாணிக் கம் கங்கேஸ்வரி மற்றும் அவரது இரண்டு வயது மகன் ஆகிய மூவரும் இவ்வாரம் கொழும்பு உயர் நீதிமன் றத்தினால் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

உயர் நீதிமன்றத்தில் இவர்கள் சார்பில் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுமீது நடந்த விசாரணையின் பின்பே இவர்கள் விடுதலை பெற்றுள்ளனர்.

வவுனியரவில் முன்பு கைதான செஞ்சிலுவைச் சங்கத் தைச் சேர்ந்த சிவநாதன் கிஷோர் என்பவரும் பெரும் முயற்சி யின் பின்பே நீதிமன்றத்தில் விடுதலை பெற்றார்.

சமீபத்தில் சில வழக்குகள் வவுனியாவிலும் மட்டக்களப் பிலும் கொழும்பிலும் கூட அவசரகால, பயங்கரவாதத் தடைச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தலின் பேரில் பெறப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்களை ஏற்க முடியாது என்று காரணங்காட்டி வழக்குத் தொடரப்பட்டவர்கள் சிலர் விடுதலை பெற்றிருக்கின்றனர்.

மற்றும் சிலர் கட்டமா அதிபர் திணைக்களத்துடன் சட்டப் பிரச்சினையில் வாதாடுகின்றனர். வேறு சிலர் உயர் நீதிமன்றங் களில் பல்வேறு சட்ட விதிகளின் கீழ் மனுத்தாக்கல் செய்து வாதாடி விடுதலையும் பெற்றுள்ளனர்.

தெய்வநாயகம் போன்ற உயர் அரச பதவிகளில் இருப் பவர் கூட ''தொலைபேசி இலக்கம் ஒருவரது நாட்குறிப்பில் இருந்தது'' என்பதற்காகக் கைது செய்யப்பட்டுக் காவலில் கிடக்க நேர்ந்திருக்கிறது.

இப்படி அற்ப காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டுச் சித்திரைவதைக்குள்ளாகி மன நோயாலும் உடல் நோயாலும் பாதிக்கப்பட்டுள்ளோர் பலர்.

இப்பொழுது மன்னாரில் கடற்படையினராலும் நாச கர்ரத் தடுப்புப் பிரிவினராலும் கைது செய்யப்பட்டு மிக மோச மான சித்திரவதைக்குள்ளான இரண்டு இளம் பெண்கள் மீதும் என்ன குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருக்கிறது?

இப்பொழுது கைதாகிச் சிறைகளில் வைக்கப்பட்டிருப்ப வர்கள் மீது விசாரணைகளைத் துரிதமாக முடித்து நீதி மன்றத் தில் நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். அல்லது விடுதலை செய்ய வேண்டும்.

இதுவரை நீதிமன்றங்கள், சுமத்தப்பட்ட எந்தக் குற்றச் சாட்டுக்களை நிராகரித்து சந்தேகத்தின் மீது துன்பம் சுமந்த வர்களை விடுதலை செய்ததோ அது போன்ற குற்றச்சாட் டுக்கள் சுமத்தப்படவிருப்பவர்களை இனியும் காவலில் வைத்திராமல் விடுதலை செய்வதும் இதே அற்ப குற்றச் சாட்டுக்களில் இனி எவரையும் கைது செய்யாமல் விடுவதும் புத்திசாலித்தனம் மட்டுமல்ல மனித நாகரிகமும் கூட.

நீதிமன்றங்கள் விடுதலை செய்யலாம். ஆனால் காரண மின்றி அனுபவித்த துன்பங்களை துடைக்க யாரால் முடியும்?

# மொழியியலும் இலக்கியத் திறனாய்வும்

கலாநிதி
**எம்.ஏ.நுஃமான்**

இரண்டாவது, உணர்ச்சிச் செயற்பாடு (**Emotive function**). பேசுவோன் எதைப் பற்றிப் பேசுகிறானோ, அது பற்றிய அவனது மனப்பாங்கின், மன நிலையின் , உணர்ச்சியின் வெளிப்பாடாக மொழி அமைவதை இது குறிக்கும். கோபம், மகிழ்ச்சி, துக்கம், வெறுப்பு போன்ற உணர்வுகள் வெளிப்படும் போது மொழி அதற்கேற்ப வடிவம் பெறுகின்றது. மூன்றாவது தூண்டல் செயற்பாடு (**Conative function**). இது ஏவல், விழிப் பொருள்களில் மொழி பயன்படுவதைக் குறிக்கும். ஏவல் வாக்கியங்களின் இலக்கண அமைப்பு ஏனைய வகைகளில் இருந்து வேறுபடும். நான்காவது, உரைதொடர்ச் செயற்பாடு (**Phatic function**). தொடர்பாடலைத் தொடங்க, நீடிக்க, துண்டிக்க அல்லது கவனத்தை ஈர்க்க, தொடர்பாடல் சரியாக நடைபெறுகின்றதா என்பதைத் தீர்மானித்துக் கொள்ள சில மொழித் தகவல்களை நாம் பயன்படுத்திக் கொள்கிறோம். எப்படி சுகமா? இன்றைக்கு மழை பெய்யும் போல, சரியான வெய்யில், இல்லையா? நான் சொல்வது விளங்குதா? போன்ற வாக்கியங்கள் உரையாடலில் இவ்வாறு செயற்படுகின்றன. ஐந்தாவது, கருவிச் செயற்பாடு (**Matalingual function**) மொழியைப் பற்றிப் பேசுவதற்கு மொழியைப் பயன்படுத்துவதை இது குறிக்கும். இலக்கண நூல்களில் மொழி இவ்வாறே பயன்படுகின்றது. அன்றாட மொழிப் பயன்பாட்டிலும் இதைக் காண்கின்றோம். அன்றாடப் பேச்சில் நாம் பயன்படுத்தும் சொற்பொருள் விளக்கங்கள் எல்லாம் இதன்பாற்பட்டனவே. உதாரணமாக 'குதிரை ஓடுவது என்றால் என்ன?'' என்று ஒருவர் கேட்க, 'குதிரை ஓடுவது என் றால் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்வது' என்று ஒருவர் விளக்குவது இத்தகையது. இங்கு மொழியை மொழியால் விளக்குகிறோம். அகராதி விளக்கங்களும் இத்தகையனவே. ஆறாவது, கவித்துவச் செயற்பாடு (poetic function) இது தகவலை குவிமையமாகக் கொண்டது. இச் செயற்பாடு தகவலின் வெளிப்பாட்டு முறை சார்ந்தது. குறிகளின் தெளிவினை மேம்படுத்துவது மூலம் குறிகளுக்கும் பொருள்களுக்கும் இடையில் உள்ள அடிப்படையான இருமைத் தன்மையை ஆழப்படுத்துகின்றது. இச்செயற்பாடு கவிதை, இலக்கியத்தில் மட்டும் காணப்படுவதில்லை.

ஜகோப்சன் இந்த ஆறு மொழிச் செயற்பாடுகளுக்கும் இடையே ஒரு படிநிலை உறவைக் காண்கின்றார். மொழித் தொடர்பாடலின் அடிப்படைக் கூறுகளான் பேசுவோர், கேட்போர் பேச்சுச் சூழல், தகவல், தொடர்பு, குறி ஆகியவற்றுடன் இந்த ஆறு செயற்பாடுகளையும் தொடர்புபடுத்துகிறார். அவ்வகையில் மேற்குறிப்பிட்ட ஆறு செயற்பாடுகளுக்கும் பின்வரும் அமைப்பைத் தருகிறார்.

சுட்டு
உணர்ச்சி கவித்துவ தூண்டல்
உரைதொடர்
கருவி

ஜகோப்சனின் கருத்துப்படி மொழியின் கவித்துவச் செயற்பாடு அல்ல. அது ஆதிக்கமுடைய தீர்மானிக்கும் செயற்பாடு மட்டுமே. ஏனைய எல்லா மொழி நடத்தைகளிலும் அது ஒரு துணை உறுப்பாகச் செயற்படுகின்றது. மொழியின் பொதுவான பிரச்சினைகளைத் தொடாமல் கவித்துவச் செயற்பாடு பற்றி ஆராய முடியாது. மறுவகையில் மொழி பற்றிய பரிசீலனை அதன் கவித்துவச் செயற்பாடு பற்றிய முழுமையான கவன ஈர்ப்பை வேண்டிநிற்கின்றது.

ஆறு வேறுபட்ட மொழிச் செயற்பாடுகளை இனங் காணக் கூடியதாக உள்ளபோதி லும் ஒரு. செயற்பாட்டை மட்டும் கொண்ட மொழித் தகவல்கள் எவற்றையும் நாம் காண்பது அரிது என்றும், இந்த வேறுபாடு பல்வேறு செயற்பாடுகளில் ஏதோ ஒன்றின் ஏகபோகத்தில் அன்றி, செயற்பாடுகளின் வேறுபட்ட ஒரு படிமுறை ஒழுங்கிலேயே தங்கியுள்ளது என்றும் ஜகோப்சன் கூறுகிறார். ஒரு தகவலின் மொழி அமைப்பு பிரதானமாக அதன் முதன்மையான செயற் பாட்டில் தங்கியுள்ளது என்றும் அவர் கூறுகிறார். (ஜகோப்சன், 1985: 66)

ஒரு மொழிக் கலையில், - அது கவிதை, சிறுகதை நாவல் அல்லது வேறு எது வாயினும் - மொழியின் கவித்துவச் செயற்பாடு மேலாதிக்கம் பெற்றிருக்கும் அதேவேளை மொழியின் அனைத்துச் செயற்பாடுகளும் அதில் இடம்பெற முடியும் என்பதையும் நாம் இங்கு மனங்கொள்ள வேண்டும். கவிதையைவிட சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வடிவங் களில் நாம் இதைப் பெருமளவு காணலாம். இவ்வகையில் இலக்கியத்தின் மொழியை மொழியின் கவித்துவச் செயற்பாட்டை ஆதிக்க அம்சமாகக் கொண்ட மொழி என நாதம் வரையறுக் கலாம்.

ஒரு விசேட துறை சார்ந்த மொழிப் பயன்பாட்டை மொழியியலாளர் **Discourse** என்பர். தமிழில் இதைக் குறிக்க சொல்லாடல் என்பது வழக்குக்கு வந்துவிட்டது. இலக்கியத்தின் மொழியை நாம் இலக்கியச் சொல்லாடல் (**Literary discourse**) எனலாம். நாம் பொதுவாக சாதாரண சொல்லாடலில் இருந்து (**Ordinary discourse**) இலக்கியச் சொல்லாடலை வேறுபடுத்தி நோக்குகின்றோம். ஆனால் சாதாரண சொல்லாடலிலும் இலக்கியச் சொல்லாடலின் கூறுகள் பெரிதும் இடம்பெறுவதால் இவை இரண்டில் இருந்தும் வேறுபட்ட நேர்சொல்லாடல் (**Lieral discourse**) என ஒன்றை அமைத்துக் கொள்வது இலக் கிய ஆய்வில் உபயோகமானது என சிப்பர் (1987) கருதுகிறார்.

இங்கு நேர் சொல்லாடல் என்பது சொல், சொற்றொடர், வாக்கியம் என்பவற்றில் நேர்பொருளை மட்டும் கொண்டுள்ள மொழி என வரையறுக் கலாம். இது ஒரு கோட்பாட்டு ரீதியான கட்டமைப்பு (**Theoritical construct**) மட்டுமே. இங்கு மொழிக் குறிகள் அவற்றின் நேர் பொருளில் மட்டும் பயன்படுத்தப்படும். இது மொழியின் சுட்டுச் செயற்பாட்டால் தீர்மானிக்கப்படுவது எனலாம். இதற்கு மறுதலையில் மொழியின் கவித்து ,வச் செயற் பாட்டால் தீர்மானிக்கப் படுவது இலக்கியச் சொல்லாடல் எனலாம்.


எனக்குக் கடுமையாகப் பசிக்கிறது.

சன்னல்களூடாகப் பெண்கள் மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவற்றை நேர் சொல்லாடல் என்றால்

என் சிறுகுடலைப் பெருங் குடல் தின்னுது

சாரளம் தோறும் பூத்தன தாமரை மலர்கள்

என்பவற்றை இலக்கியச் சொல்லாடல் எனலாம். நேர் சொல்லாடலை மையப் புள்ளியாகக் கொண்டால், ஏனைய சொல்லாடல்களை அதிலிருந்து விலகிச் செல்வனவாக விளக்கலாம். இதைப் பின்வரும் படம் விளக்குகின்றது.




நான் ஏற்கனவே விளக்கியது போல இலக்கியச் சொல்லாடலில் எல்லாவகையான சொல்லாடல்களும் இடம்பெறும் வாய்ப்பு உண்டு. ஏனெனில் இலக்கியம் முழுமொத்தமான மனித அலுவல்களையும் உள்ளடக்குவது. ஆயினும் அது நேர் சொல்லாடலில் இருந்து பெருமளவு விலகிச் செல்லும் இயல்புடையது.

இவ்வாறு விலகும்போது நேர் சொல்லாடலின் இலக்கண அமைப்பைவிட, பொருண்மை அமைப்பை அமைப்பில் இருந்தே அது பெரிதும் விலகுகின்றது. சொல்லுக்கும் பொருளுக்கும் இடையிலான நேர்தொடர்பைத் துண்டித்துக் கொண்டு அது வெளியே சஞ்சரிக்கின்றது.

இலக்கியச் சொல்லாடலில் இருந்து பொருண்மை அமைப்பில் பெரிதும் விலகுகின்றது எனப் பார்த்தோம். நோம் சொம்ஸ்கி (1965) இலக்கணம் பொருண்மையில் இருந்து சுயாதீனமானது (**Grammar is independent from semantiics**) என்ற கருத்தை வலியுறுத்துகிறார். இதை நிறுவ அவர் பயன்படுத்தும் புகழ்பெற்ற உதாரணம் பின்வருமாறு

**Colourless green ideas sleep furiously**

(நிறமற்ற பச்சைநிற எண்ணங்கள் மூர்க்கமாகத் துயில்கின்றன)

*(தொடரும்)*

# கண்களைக் கட்டி படையினர் கடத்திய மாணவி பாதையோரத்தில் கிடந்தாள்

(யாழ் நிருபர்)

வடமராட்சியில் உள்ள ஒரு கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை சிறிலங்காப் படையினரால் கடத்திச் செல்லப்பட்ட 18 வயது மாணவியான கந்தசாமி சசிந்தராணி புதன்கிழமை கண்கள் கட்டப்பட்ட நிலையில் பாதை ஓரத்தின் அருகில் அனாதரவான நிலையில் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டார். டியூசனுக்கு சென்று கொண்டிருந்தபோது இம்மாணவியை படையினர் அம்மாணவியின் கண்களைக் கட்டிக் கடத்திச் சென்றனர் என்று அம்மாணவியின் தாயார் இன்று வியாழக்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் முறையிட்டார்.

இதேவேளை இன்று காலை ஆறு மணியளவிலிருந்து காலை பத்து மணி வரை அச்சுவேலி தவிர்ந்த ஆவரங்கால் சந்தியிலிருந்து வல்லவெளி வரையிலான பிரதேசத்தை சிறிலங்கா அரச படையினர் பெரிய அளவில் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

## வல்வெட்டித்துறைப் பகுதியில் 6 மணிநேரம் மீன் பிடிக்க அனுமதி

(யாழ்நிருபர்)

வல்வெட்டித்துறை மீனவர்கள் இன்று காலை வல்வெட்டித்துறை இராணுவ முகாம் முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடுத்து மீன் பிடிக்கும் நேரம் மூன்று மணித்தியாலங்களால் அதிகரிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான வல்வெட்டித்துறை மீனவர்கள் இன்று காலை இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள்.

மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ள நேரத்தை அதிகரிக்க வேண்டும். அல்லது எங்களைச் சுட்டுத் தள்ளுங்கள் என்று ஆர்ப்பாட்டம் நடத்திய மீனவர்கள் இராணுவத்தினரிடம் தெரிவித்தனர்.

அதனை அடுத்து சிறிலங்கா இராணுவத்தினர் நள்ளிரவு 12 மணி தொடக்கம் காலை 6 மணி வரை வல்வெட்டித்துறை மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர் என்று அறிவித்தனர்.

முன்னர் அதிகாலை 4 மணி தொடக்கம் காலை 6 மணி வரையே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தது

எனினும் வல்வெட்டித்துறை தவிர்ந்த ஏனைய பகுதி மீனவர்கள் அதிகாலை 4 மணி தொடக்கம் காலை 6 மணி வரையுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## நெல் விளைச்சல் 60 வீதம் குறைந்தது

வானிலை சீரின்மையின் காரணத்தால் வன்னியின் முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் விளைச்சல் 60 வீதம் குறைவாக உள்ளதாக முல்லை விவசாய உதவிப்பணிப்பாளர் பால சுந்தரம் தெரிவித்துள்ளார்.

மூல்லை மாவட்டத்தில் பெரும்போகத்தில் 14,290 மெற்றிக்தொன் விளைச்சல் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பல பாரிய நீர்ப்பாசனக்குளங்களின் கீழ் பெரும் போக அறுவடை முடியாத காரணத்தால் சிறுபோகச் செய்கை ஏக்கர் நிலையில் முழுமையாக ஆரம்பிக்கப்படும். வானிலை சீரின்மை காரணமாக பிந்திய விதைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதாலேயே சிறுபோகம் பிந்திச்செல்கிறது.

கடந்த பெரும்போகத்தில் முல்லை மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசன நக்குளங்களின் கீழ் 9520 ஏக்கரிலும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 2913 ஏக்கரிலும் மானாவாரியாக 5190 ஏக்கரிலும் நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

## படை நடவடிக்கை நிறுத்தப்பட்டது

நேற்று அதிகாலை 3 மணியளவில் சிறிலங்கா அரச படையினர் நாகர்கோயிலுக்கு மேற்காக உள்ள சுடலைப்பிட்டிப் பிள்ளையார் கோயில் பகுதியில் தொடங்கிய இராணுவ நடவடிக்கை இன்று பிற்பகல் 3 மணியளவில் விடுதலைப்புலிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக நிறுத்தப்பட்டது.

நேற்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுடலைப்பிட்டி பிள்ளையார் கோயில் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் கடும் குண்டு விச்சுத் தாக்குதலை நடத்தினர்.

சுடலைப்பிட்டி பிள்ளையார் கோயில் நாகர்கோயிலிலிருந்து சுமார் 500 மீற்றர் மேற்கே சிறிலங்கா அரச படைகளின் நிலைகளிலிருந்து நாகர்கோயிலுக்கும் எழுது மட்டுவானுக்கும் இடையில் உள்ளது. நாகர் கோயில் படை முகாம் கரையோரப் பகுதியில் உள்ளது

## கிராம அபிவிருத்தி பொதுக்கூட்டம்

(வெற்றி)

களுதாவளை கிராமத்தின் அபிவிருத்திப் பணிகளை எதிர்காலத்தில் ஒன்றிணைந்து முன்னெடுப்பதற்கென பொதுவான அமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான பொதுக்கூட்டம் நாளை களுதாவளை மகா வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## எழுச்சி விழா பொதுக் கூட்டம்

(அரியம்)

அம்பிலாந்துறை கலைமகள் மகாவித்தியாலையத்தின் எழுச்சி விழா பொதுக்கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகள் அம்பிலாந்துறை கலைமகள் வித்தியாலைய மண்டபத்தில் இடம் பெறும்.

இம்பிலாந்துறை கலைமகள் வித்தியாலையத்தின் பெற்றோர் நலம் விரும்பிகள் மற்றும் பாடசாலையில் நம்பிக்கையாளர்கள் அனைவரையும் சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## உயிரிழந்த வடுதலைப் புலிகள்

நேற்று முன்தினம் மணலாற்றுப்பகுதியில் சிறலங்கா இராணுவத்தினரின் தாக்குதலின் போது கப்டன் வாகினி (கந்தசாமி கலா, மட்டக்களப்பு மாவட்டம்), லெப்ரினன் லதா (சின்னையா அமராவதி, மட்டக்களப்பு மாவட்டம்) ஆகியோர் பலியாகியுள்ளதாக புலிகளின் குரல் வானொலி இன்று காலை தனது செய்தியறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பிரதேச எல்லைப்படை வீரர்களை கௌரவித்தல்

(யாழ் நிருபர்)

முழங்காவில் பிரதேச எல்லைப்படை வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஜெயபுரம் பூநகரி மகாவித்தியாலயத்தில் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் முழங்காவில் பிரதேச பொறுப்பாளர் கலைமகள் தலைமையில் இடம் பெற்றுள்ளது.

நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ எல்லைப்படை பொறுப்பாளர் பாப்பா ஏற்றி வைத்தார். அரங்க நிகழ்வில் கௌரவிப்பு உரைகளை தமிழீழ எல்லைப்படை பொறுப்பாளர் பாப்பா அவர்களும், தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோரும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் போராளிகள் பொதுமக்கள் போரெழுச்சிக்குழுவினர் பொது அமைப்பினர் வர்த்தகர் என பலர் கலந்து கொண்டனர்.

## கண்டாவளை 153 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

கிளிநொச்சி கண்டாவளை கல்விக்கோட்டத்தில் 20 பாடசாலைகளில் 153 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது. 7306 மாணவர்களுக்கு 324 ஆசிரியர்கள் தேவையான இக்கல்விக் கோட்டத்தில் 171 ஆசிரியர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர்.

ஆகக் கூடுதலான ஆசிரியர் பற்றாக்குறை கிராமப்புறப் பாடசாலைகளில் காணப்படுகிறது. மயில்வாகனம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 66 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் உள்ளார். 132 மாணவர்கள் உள்ள இங்கு இலண்டு ஆகிரியர்களே உள்ளனர். கண்ணகையம்மன் வித்தியாலயத்தில் 72 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் உள்ளார். 437 மாணவர்கள் உள்ள இங்கு 17 ஆசிரியர்கள் தேவையான நிலையில் 6 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர்.

உமையாள்புரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 138 மாணவர்களுக்கு 7 ஆசிரியர்கள் தேவையான இடத்தில் 2 ஆசிரியர்களே உள்ளனர்.

கண்டாவளைக் கோட்டத்தில் முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்தில் 21 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறையும், கண்டாவளை மகாவித்தியாலயத்தில் 13 ஆசிரியர்களுக்கும், தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் 16 ஆசிரியர்களுக்கும், பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் 12 ஆசிரியர்களுக்கும், நாகேஸ்வரா வித்தியாலயத்தில் 5 ஆசிரியர்களுக்கும், ஆனையிறவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 13 ஆசிரியர்களுக்கும், குமாரசாமிபுரம் தமிழ்க்கலவன் பாடசாலையில் 4 ஆசிரியர்களுக்கும், கட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 400 ஆசிரியர்களுக்கும், புன்னைநீராவி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 4 ஆசிரியர்களுக்கும், கல்மடுநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 4 ஆசிரியர்களுக்கும், இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 14 ஆசிரியர்களுக்கும், முரசுமோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஒரு ஆசிரியருக்கும், பரந்தன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 5 ஆசிரியர்களுக்கும், தர்மபுரம் இலக்கம் ஒன்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 5 ஆசிரியர்களுக்கும், பெரியகுளம் ஐயனார் வித்தியாலயத்தில் 4 ஆசிரியர்களுக்கும், நாகேந்திரா வித்தியாலயத்தில் 7 ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை காணப்படுகிறது.

## யானை தாக்கி படுகாயம்

வேட்டைக்குச் சென்றவர் யானையால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார். தர்மபுரத்தைச் சேர்ந்த ந.பழனியாண்டி (40) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் தற்போது கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் கடந்த 23ஆம் திகதி அக்கராயன்குள மேற்குக்கரை க்காட்டிலே இடம்பெற்றுள்ளது.

## அமெரிக்கத்தூதரின் பேச்சுக்கு மாநகர மேயர் கண்டனம்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரின் யாழ்ப்பாணப் பேச்சு யாழ்ப்பாண மக்களுக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்தியிருப்பதாக யாழ் மாநகர மேயர் திரு. என்.ரவிராஜ் தெரிவித்தார்.

இன்று காலை பத்து மணியளவில் யாழ் மாநகர சபை மண்டபத்தில் நடந்த யாழ் மாநகரசபைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை தோன்றிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அமெரிக்கத்தூதர் திரு. ஆஸ்லி வில்ஸ் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய பேச்சு சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளது என்றும் திரு. ரவிராஜ் தெரிவித்தார்.

தாயகக்கோட்பாட்டை உதாசீனம் செய்தும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பதைப் புறந்தள்ளும் வகையிலும் அமெரிக்கத்தூதர் திரு.ஆஸ்லி வில்ஸ் யாழ்ப்பாணத்தில் இம்மாதம் ஏழாம் திகதி புதன்கிழமை பேசியதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்றும் திரு.என்.ரவிராஜ் தெரிவித்தார்.

## கல்முனையில் சாஹிறா முதலிடம்

(காரைதீவு நிருபர்)

அண்மையில் வெளியான க.பொ.த.(சா.த) பரீட்சை பெறு பேற்றினடிப்படையில் கல்முனைக் கல்வி மாவட்டத்தில் கல்முனை சாஹிறா தேசிய கல்லூரி முன்னணியில் உள்ளது.

மூன்று மாணவர்கள் அனைத்து 10 பாடங்களிலும் "டி" சித்தி பெற்றுள்ளனர். 9டி சித்தியை இருவர் பெற்றுள்ளனர்.

மருதமுனை அல்-மனார் தேசிய பாடசாலையில் இரு மாணவர்கள் 10 "டி" பெற்றுள்ளனர். ஏசி.பர்வின், ரி.எம்.றிகான் ஆகியோரே 10டி பெற்றவர்களாவர்.

சம்மாந்துறை முஸ்லிம் தேசிய கல்லூரியில் ஏ.எல்.றிஸ்வான். ஜனுல் ராசியா ஆகிய இரு மாணவர்கள் 10 டி சித்தி பெற்றுள்ளனர். 9டி சித்திகளை நால்வர் பெற்றுள்ளனர்.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் சாமில் பவ்சாத் என்ற மாணவன் 10டி பெற்றுள்ளார். கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியிலும் ஒரு மாணவன் 10டி சித்தி பெற்றுள்ளார்.

கல்முனை ம/மூத் மகளிர் கல்லூரியில் ஒரு மாணவி 10டி சித்தி பெற்றுள்ளார். சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் 6டி 3 சி என்ற சிதி முன்னணியிலிருப்பதாக அதிபர் கூறினார்.

சம்மாந்துறை அல் - மர்ஜான் மகளிர் கல்லூரியின் மாணவி எம்.ஏ.சிபர்வின் "9டி, 1சி" சித்தியை பெற்றுள்ளார்.

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி7டி 3சி , கல்முனை உவெஸ்லி கல்லூரி 6டி 4சி பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

# காஸாவிலுள்ள அரபாத் இல்லம் இஸ்ரேல் வான் தாக்குதலில் சேதம்

(காஸா)

காஸா பள்ளத்தாக்கிலுள்ள பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தின் இல்லத்தின் மீது இஸ்ரேலிய ஹெலிக்கொப்ரர் நடத்திய தாக்குதலில் இல்லம் சேதமடைந்தது.

இத் தாக்குதல் சமயத்தில் அரபாத் ஜோர்டானில் நடந்த அரபு உச்சிமா நாட்டில் கலந்து கொண்டிருந்ததால் தனது இல்லத்தில் இருக்கவில்லை.

ஏவுகணையொன்றினால் தாக்கப்பட்ட அவரது இல்லத்தின் அறைகள் கண்ணாடித்துண்டுகள் மற்றும் வீட்டுப் பொருட்கள் உடைந்து சிதறிக் கிடந்ததையும் வீட்டச் சுவர்களில் வெடிப்பும் துளைகளும் ஏற்பட்டிருப்பதையும் ராய்ட்டர் தொலைக்காட்சியில் காண்பிக்கப் பட்டன.

பலஸ்தீனிய உயர் பொலிஸ் அதிகாரிகள் சேதமடைந்த அரபாத்தின் இல்லத்தைப் பார்வையிட்டு சேதத்தை மதிப்பிட்டனர்.

இஸ்ரேலியர் கடந்த புதன் கிழமை காஸாவிலும் மேற்குக் கரையிலும் நடத்திய வானத் தாக்குதல்கள் நியாயப்படுத்த முடியாத ஆக்கரமிப்பு நடவடிக்கை என்று அரபாத்தின் உதவியாளர் ஒருவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கும் இஸ்ரேல் அரச பயங்கரவாதத்தின் மூலம் பலஸ்தீனியர்களைப் பணிய வைக்கலாம் என்று கருதுகிறதென்றும் அந்த அதிகாரி கூறினார்.






ஜப்பானில் ஒசாகோ நகரில் பிரமாண்டமான புதிய பொழுது போக்கு பூங்காவை உருவாக்கி இருக்கிறார்கள். புதிய பூங்கா பற்றி பத்திரிகையாளர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. அப்போது புகழ் பெற்ற கார்ட்டூனான பாப்பாயி வேடமிட்ட நபரை கட்டியணைத்தபடி ஒரு ஜப்பானிய சிறுமி போஸ் கொடுத்த போது எடுத்த படம்.

# இந்திய மிசோரம் மாநில சட்ட சபையில் தாக்குதல்; மந்திரிகளுக்கு அடி உதை!

(ஐஸ்வால்)

மிசோராம் சட்டசபையில் மந்திரிகளை எம்.எல்.ஏ.க்கள் அடித்து உதைத்தனர். இதனால் ஏற்பட்ட குழப்பத்தில் சபையை சப்பாநாயகர் ஒத்திவைத்தார்.

மிசோராமில் மிசோ தேசிய முன்னணி ஆட்சி நடத்தி வருகிறது. முதல்வராக சோரம் தங்கா இருக்கிறார்.

மிசோராம் சட்டசபையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும் முதல்வர் சோரம் தங்கா மீது எதிர்க்கட்சியினர் ஊழல் புகார் கூறினார். அவரது பண்ணை வீட்டில் அரசு எந்திரத்தை தவறாக பயன்படுத்தி பங்களா கட்டி வருகிறார். இது குறித்து கூட்டு பாராளுமன்ற குழு விசாரணை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரான மிசோ மக்கள் மாநாட்டுக் கட்சித் தலைவர் லால் மிங தங்கா மற்றும் காங்கிரசார் கோரினர். அவையின் மையப் பகுதிக்குச் சென்று கோஷம் எழுப்பினர். இதனால் சபை நடவடிக்கைகள் தடைபட்டன.

பின்னர் சபை கூடியபோது அவை போர்க்களமானது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சி வரிசையை நோக்கி முன்னேறினார்கள். முதல்வர் சோரம் தங்காவை அடிக்கப் பாய்ந்தனர். உடனே மந்திரிகள் மற்றும் எம்.எல்ஏ.க் கள் ஓடிவந்து முதல்வரை காப்பாற்ற முனைந்தனர்.

அந்த சமயத்தில் பொதுப் பணித்துறை மந்திரி தமிங தங்காவை எம்.எல்.ஏ.க்கள் சரமாரி தாக்கினர். அடி தாங்காமல் அவர் அலறிய போதும் விடவில்லை. அவரை காப்பாற்ற இன்னொரு மந்திரி சங்குமா ஓடி வந்தார். உடனே அவரை நோக்கி எம்.எல்.ஏ.க்கள் பாய்ந்து அடித்தனர்.

இதையடுத்து ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஓடி வந்து காங்கிரஸ் எம்.எல்.ஏ. ரோகாவை அடித்து உதைத்தனர். முதல்வரை தாக்க வந்ததால் எதிர்க்கட்சித் தலைவர் லால்மிங்தங்காவை சூழ்ந்து கொண்டு சரமாரி தாக்கினர். இரு தரப்பினரும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டதால் சபை போர்க்களம் போல் காட்சி அளித்தது.

இந்த அமளியில் சபையில் இருந்த 4 மைக்குகள் உடைத்து எறியப்பட்டன. ஒரு மேஜையும் உடைக்கப்பட்டது. இரு தரப்பினரையும் விலக்கி விட சபைக் காவலர்கள் ஓடி வந்தனர்.

ஆனால் இருதரப்பு எம்.எல்.ஏ.க்களும் தொடர்ந்து சண்டையிட்டுக்கொண்டே இருந்தனர். நீண்ட போராட்டத்துக்குப் பிறகே ஆளும் மற்றும் எதிர்க் கட்சியினரை காவலர்கள் விலக்கி விட்டனர். இந்த நிலையில் சபையை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

மீண்டும் சபை கூடிய போதும் கூச்சல் குழப்பம் நீடித்தது. எனவே 3 முறை சபையை சபாநாயகர் ஒத்தி வைத்தார். பின்னர் சட்டசபையை சுற்றி ஆயுதம் தாங்கிய போலீசார் நிறுத்தப் பட்டனர்.

✷✷✷✷

# பறக்கும் டைனோசர் எலும்புக்கூடு மோசடி

பறவைகளில் இருந்துதான் டைனோசர் என்ற மிருகங்கள் தோன்றியதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். பழங்கால பறவைகள் மற்றும் டைனோசர் எலும்புக்கூடுகள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. ஆனால் இந்த பறவைகள் எப்படி டைனோசர்களாக மாறின என்பதை காட்டும் இந்த இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மிருகங்களின் எலும்புக்கூடுகள் கிடைக்கவில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த விலங்குகளை ஆர்ச்சரேப்டர் என்று கூறுகிறார்கள்.

ஒரு ஆர்ச்சரேப்டர் எலும்புக்கூடை சீனாவில் கண்டு எடுத்ததாக அமெரிக்க புவியியல் நிறுவனம் ஒன்று கடந்த 1999-ம் ஆண்டு அறிவித்தது. அந்த எலும்புக்கூடு போலியானது என்று இப்போது தெரியவந்துள்ளது.

பல விலங்குகள் பறவைகளின் எலும்புக்கூடுகளை இணைத்து இந்த ஆர்ச்சரேப்டர் எலும்புக்கூடு உருவாக்கப்பட்டு உள்ளது என்று கனடா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளை சேர்ந்த சர்வதேச நிபுணர்குழு அறிவித்து இருக்கிறது. படத்தில் காண்பது ஆர்ச்சரேப்டர் விலங்கின் மாதிரி தோற்றம்.

# புற்றுநோய் குணப்படுத்த புதிய மருந்து கண்டுபிடிப்பு

புற்றுநோய் என்பது ஒருவகை உயிர்க்கொல்லி நோய் ஆகும். இதனால்தான் புற்றுநோய் என்றதும் மக்கள் பயப்படுகின்றனர். இந்த புற்று நோய்க்கு புதிய மருந்தை லண்டனை சேர்ந்த டாக்டர் வெட்ஜான் கார்டர் கண்டுபிடித்து இருக்கிறார். இதற்கு சி.வி.247 என்று பெயரிடப்பட்டு இருக்கிறது. இதை நாய், பூனை போன்றவற்றுக்கு கொடுத்து பரிசோதனை நடத்தி வெற்றி கண்டுள்ளார். இப்போது குணமாகாத புற்றுநோயாளிகளுக்கும் கொடுத்து பரிசோதித்து வருகிறார். இதுபற்றி டாக்டர் கார்டர் கூறுகையில், நான் 1988-ம் ஆண்டு இந்த முயற்சியில் இறங்கினேன். 12 ஆண்டுகால ஆராய்ச்சியில் இந்த மருந்துக்கான பார்முலாவை கண்டுபிடித்தேன். அதை விலங்குகளுக்கு கொடுத்து பார்த்ததில் நல்ல பலன் கிடைத்தது. இப்போது குணமாகாத நிலையில் உள்ள புற்றுநோயாளிகளுக்கு கொடுத்து பரிசோதனை செய்து வருகிறேன் என்றார்.



இந்தியச் சினிமா நட்சத்திரம் சொனாலி பெந்த்ரே சுவிஸின் பிரபல்ய ஒமேகா கடிகார விளம்பரத்துக்கு அரை நிர்வாணத்துடன் போஸ் கொடுத்ததாகக் குற்றம் சாட்டப் பட்டிருக்கிறார்.



மேற்குக் கரையில் உள்ள அரபாத்தின் 17வது படையின் தலைமையகத்தின் மீது இஸ்ரேலிய வான் படைகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் கொளுந்துவிட்டு எரியும் காட்சி தொலைக்காட்சியில் இப்படித் தெரிந்தது.

# ''ம.தி.மு.க.தொகுதி ஒதுக்கீட்டில் மறுபரிசீலனைக்கு இடமில்லை''

(சென்னை)

ம.தி.மு.க.விற்கு ஏற்கனவே தந்த 18 தொகுதிகளில் மறுபரிசீலனைக்கு இடமில்லை. அறிக்கை போர் நடத்த விரும்பவில்லை என்று அமைச்சர் ஆற்காடு வீராசாமி கூறினார்.

அமைச்சர் ஆற்காடு வீராசாமி அண்ணா அறிவாலயத்தில் நேற்று இரவு நிருபர்களிடம் கூறியதாவது:-

ம.தி.மு.க. சார்பில் எந்த 43 தொகுதிகளின் பெயர்களை எழுதி கையெழுத்திட்டு தந்தார்களோ அதற்குள்ளே தான் 18 தொகுதிகளையும், வேறு 3 தொகுதிகளையும் மொத்தம் 21 தொகுதிகளை தருவதற்கு முன்வந்து பட்டியல் கொடுத்தோம்.

ஆனால் அவர்கள் இரண்டாவதாக ஒரு பட்டியல் கொடுத்து விட்டு அதுபற்றிய விவரங்களை அளிக்கிறார்கள். எங்களால் அவர்கள், முதல் பட்டியலில் கொடுத்த 18 தொகுதிகளைத்தான் தர முடியும். எஞ்சியுள்ள 3 தொகுதிகள் பற்றி பிரச்சினை இருப்பின் அதை பேசித் தீர்க்கலாம். இதை தவிர மறுப்ரிசீலனைக்கே இடமில்லை. மாறி மாறி ம.தி.மு.க.வும், தி.மு.க.வும் அறிக்கை போர் நடத்திக்கொண்டிருக்க நாங்கள் விரும்பவில்லை.

❀❀❀❀

# உலகமயமாதலுக்கும் பிராந்திய மயமாதலுக்கும் இடையிலான வேறுபாடுகள்.

| உலகமயமாதல் | பிராந்திய மயமாதல் |
|---|---|
| 1. உலக மயமாதலானது பொருளாதாரத்தினை ஒரு கேந்திர நிலையத்திலிருந்து உலகளாவிய ரீதியில் வியாபித்துச் செல்லுகின்றது. | 1. பிராந்திய மயமாதல் குறித்த ஒரு கேந்திர நிலயத்தினை நோக்கிப் பொருளாதாரத்தினை உள்வாங்குகின்றது. |
| 2. உலக மயமாதல் பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வளருகின்றது. | 2. பிராந்திய மயமாதல் பொருளாதார அரசியற் காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு உருவாகின்றது. |
| 3. உலக மயமாதலானது ஒரு சுதந்திரமான வர்த்தக முறைக்கு வழிவகுக்கின்றது. | 3. பிராந்தியமயமாதல் பிராந்தியம் பாதுகாப்பு வாதத்தினைஅடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. |

## உலக வர்த்தக அமைப்பு எதிர்நோக்குகின்ற சவால்கள்.

1. ஐக்கிய அமெரிக்கா - ஐரேப்பிய யூனியன் - ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் கடுமையான வர்த்தகப் போட்டா போட்டி.
2. உலக வர்த்தக அமைப்பின் தீர்மானங்களை ஏற்றுக் கொள்வதில் சில நாடுகள் காட்டுகின்ற தயக்கம்.
3. உலக வர்த்தக அமைப்பினுடைய கொள்கைகளுக்கு மாற்றமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு வாதக் கொள்கைகள்.
4. அமெரிக்கா, சர்வதேச பண நிதியம் என்பவற்றின் கைப்பொம்மையாக உலக வர்த்தக அமைப்பும் தொழிற்படலாம். என்ற வளர்முக நாடுகளின் ஐயப்பாடு.
5. இவ்வமைப்பின் தலைமைத்துவத்தினைக் கைப்பற்றுவதில் ஏற்படக் கூடிய போட்டித்தன்மை.



❖❖❖❖❖

*Question*

**உலக வியாபார அமையத் (World Trade Oranization) தின் பங்கினை விளக்குக.**

*Answer*

* சர்வதேச வர்த்தகத்தின் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல் மூலம் வர்த்தகத்தைத் விருத்தி செய்தல்
* சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் வரிமுறைகளைக் குறைத்தல்
* அனுமதிப் பங்கு முறைகளை (கோட்டா முறை) குறைத்தல்.
* சர்வதேச வர்த்தகத்துக்கு தடையாகவுள்ள ஏனைய கட்டுப்பாடுகளை நீக்க நடவடிக்கை எடுத்தல்.

## உங்களோடு பகிர்ந்து கொள்ளவதற்காக

01. இலங்கையில் தற்போது காணப்படும் நுகர்வோர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய
- ☐ 1) 14 மில்லியன்
- ☐ 2) 16 மில்லியன்
- ☐ 3) 18 மில்லியன்
- ☐ 4) 19 மில்லியன்
- ☐ 5) 20 மில்லியன்

02. வியாபாரம் தோற்றுவிக்கப்பட்டது ஏனெனில்
- ☐ 1) நேரடி உற்பத்தி காரணமாக.
- ☐ 2) பணப்பாவனை காரணமாக.
- ☐ 3) கைத்தொழில் புரட்சி காரணமாக.
- ☐ 4) நேரடியற்ற உற்பத்தி காரணமாக.
- ☐ 5) பண முறைமை காரணமாக.

03. உலக சந்தையிலுள்ள நுகர்வோரின அண்ணளவான, எண்ணிக்கை.
- ☐ 1) 10 பில்லியன் ☐ 2) 8 பில்லியன்
- ☐ 3) 6 பில்லியன் ☐ 4) 4 பில்லியன்
- ☐ 5) 2 பில்லியன்

04. ஐரோப்பிய சமூகத்தில் (EC)பயன்படுத்தப்படும் பண அலகு.
- ☐ 1) எஸ். டீ. ஆர் SDR ☐ 2) யூரோ(EURO)
- ☐ 3) அமெரிக்க டொலர்(US Dollor) ☐ 4) யூரோ டொலர்
- ☐ 5) யூரோ புவுண்ட்

05. பின்வருவனவற்றுள் ஏந்நாடு (ASEAN) இன் அங்கத்தவர் இல்லை?
- ☐ 1) மலேசியா ☐ 2) சிங்கப்பூர்
- ☐ 3) தாய்லாந்து ☐ 4) ஜப்பான்
- ☐ 5) இந்தோனேசியா

06. பொருட்கள் சேவைகள் வரி வீதம்..
- ☐ 1) 6.5% ☐ 2) 12.5%
- ☐ 3) 15% ☐ 4) 16.5%
- ☐ 5) 19%

07. வியாபாரம் ஒழுக்கம் பற்றிய சரியான கூற்று.
- ☐ 1) எது நல்லதோ அதைச் செய்வதும், எது பிழையானதோ அதைத் தவிர்ப்பதும் ஆகும்.
- ☐ 2) வாடிக்கையாளருக்கு பௌவியமாய் இருத்தல்.
- ☐ 3) தரமான பொருட்களை உற்பத்தி செய்வது.
- ☐ 4) நியாயமான ஒரு விலையில் பொருட்களை விற்பது.
- ☐ 5) மிகைப்படுத்திய விளம்பரத்தை செய்வதைத் தவிர்ப்பது.

08. ஆள் பற்றிய தரவில் (Bio - Data) பின்வருவனவற்றுள் எவை அடங்கும்.
- ☐ 1) வேலையைப் பற்றிய விபரங்கள்.
- ☐ 2) விண்ணப்பதாரி பற்றிய விபரங்கள்.
- ☐ 3) தொழில் தருணர் பற்றிய விபரங்கள்.
- ☐ 4) தகைமைத் தேவைகள் பற்றிய விபரங்கள்.
- ☐ 5) மேற்குறிப்பிட்ட எல்லாம்.

09. பின்வருவனனவற்றுள் எது இலத்திரன் காசாக் கருதப்படுவதில்லை.
- ☐ 1) வரவு அட்டை [Debit Card]
- ☐ 2) உள்நாட்டுக் கடன் அட்டை [Local credit card]
- ☐ 3) ATM அட்டை (தொலை அட்டை - Teller Card)
- ☐ 4) சர்வதேச கடன் அட்டை
- ☐ 5) பிரயாணிகள் காசோலைகள்.

10. இலங்கை மத்திய வங்கியின் ஒரு பிரதான நோக்கம்
- ☐ 1) அரசாங்க வங்கியாகச் செயலாற்றுவது.
- ☐ 2) அரசாங்கத்தின் நிதியில் பிரதிநிதியாகச் செயலாற்றுவது.
- ☐ 3) வங்கிகளின் வங்கியாக செயலாற்றுவது
- ☐ 4) இலங்கை ரூபாவின் இஸ்திரத்தன்மையைக் காப்பாற்றுவது.
- ☐ 5) பணச்சந்தையையும் மூலதனச் சந்தையையும் முன்னேற்றுவது.

# ''போர் நிறுத்தம், சமாதானத்துக்கு பல்கலை ஊழியர் சம்மேளனம் தூண்டும்''

(திருகோணமலை)

தற்போது நம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் அத்தியாவசியமான யுத்த நிறுத்தத்தையும் சமாதானத்தையும் முன்னெடுக்க அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம் அரசாங்கத்தைத் தூண்டும்'' என்று அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் திரு.ஜே.பி. திருமலை வளாகத்தில் கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க திருமலை வளாக ஊழியர்களுக்காக நடாத்தப்பட்ட விசேட பொதுக்கூட்டம் கடந்த 27ஆந் திகதி செவ்வாய்க்கிழமை கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் திரு.ப.சுப்பையா தலைமையில் வளாகத்தில் நடைபெற்றது. கலரலியத்த மேலும் பேசுகையில் கடந்த கால வேலை நிறுத்தப் போராட்டங்களின் போது வடக்கு கிழக்கு, தென் கிழக்கு பல்கலைக்கழகங்கள் வழங்கிய பூரண ஒத்துழைப்பே வெற்றிக்கு உரமிட்டன என்றும் இனிமேல் இதனுடன் சேர்த்து திருமலை வளாகமும் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப் போவது பெருமை அளிக்கிறது. என்றும் கூறினார். இவரைத் தொடர்ந்து சம்மேளன இணைச் செயலாளர் ஆரியபால ''நாட்டில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு சமாதானம் ஏற்பட சம்மேளனம் சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும்'' என்று கூறினார். அத்துடன் தொழிற் சங்க சம்மேளனம் பல்கலை ஊழியர்களுக்கு பேராட்டங்கள் மூலம் ஈட்டிய ஓய்வூதியம், சம்பள உயர்வு, சம்பள முரண்பாடு, கடன்களுக்கான வட்டிவிதம் குறைப்பு போன்ற வெற்றிகளைக் குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து பேசிய சம்மேளன பொருளாளர் திரு.ரத்னாயக்கா சமாதானத்தின் அவசியத்தை சொன்னார்.

சம்மேளனத்தின் இணைச் செயலாளர் திரு.லயனல் மல்வத்தகே உப தலைவர் திரு.லொக்கு கமகே ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினர். திரு.டி.ஏ. ஜெராட் திரு.கே.பி. பத்மசிறி ஆகியோர் திருமலை வளாகத்தின் கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதி களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க செயலாளர் திரு. எஸ். எஸ்.ஆரியகாந்தன், திருமலை வளாகப் பிரதிநிதி திரு. கே.பி. பத்மசிறி ஆகியோர் நன்றியுரை நிகழ்த்தினர்.

# நாவிதன்வெளிபிரதேச செயலகம் இனி வழங்கும்

நாவித்ன்வெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரச்சோலை கிராமத்தை நிர்வாக ரீதியாக இணைத்தும் 1996ம் ஆண்டு 1999ம் ஆண்டு பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர், சிபார்சுக் குழுக்களின் அனுமதியுடன் வீரச்சோலை உட்பட்ட இருபது கிராம சேவையாளர் பிரிவை நாவிதன் வெளி பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கு 21-12-2001ஆம் ஆண்டு அமைச்சர் அவையின் அங்கீகாரத்துடன் நாவிதன்வெளி பிர தேச செயலகத்திற்கு அனுமதியளிக்கப்பட்டது.

எங்.களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் ஊடாகவே வழங்க வேண்டும் என்று உறுதியாக கூறினார்கள்.

இதன் தொடர்பாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் அம்பாறை அரசாங்க அதிபருடன் 28ஆந்திகதி தொடர்பு கொண்டு இந்த நிலைமையை தெளிவுபடுத்தினர். இதற்கு அம்பாறை அரசாங்க அதிபர்தான் மீண்டும் நாவிதன் வெளி பிரதேச செயலாளருடனும், சம்மாந்துறை பிரதேச செயலாளருடனும் தொடர்பு கொண்டு வீரச்சோலை மக்களுக்குரிய சகல கொடுப்பனவுகளையும் நாவிதன் வெளி பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்குவ்தற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். இது தொடர்பாக விரிவான அவசர தொலை மடலை அமைச்சர் ரிச்சட் பத்திரனவிற்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மட்டக்களப்புக் கிளை அறிவித்துள்ளது.

# இஸ்லாமிய கலாச்சார நிலையம்

(சாய்ந்தமருது நிருபர் மௌலானா)

சாய்ந்தமருது அல்-கமறூன் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இஸ்லாமிய கலாசார நிலையத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஐ.தே.கட்சி செயற்குழு உறுப்பினரும், கல்முனைத் தொகுதி அமைப்பாளருமான எம்.எம்.முஸ்தபாவின் தனிப்பட்ட நிதியில் இக்கலாசார நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இந்த இஸ்லாமிய கலாசார நிலையத்தில் ஐவேலைத் தொழுகைக்கான பள்ளிவாசல், குர்ஆன் மத்ரஸா, நூலகம் ஆகியனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.


**கண்ணீர் † அஞ்சலி**

மலர்வு 30 09 1983



உதிர்வு 29 03 2001

நவயோகானந்தம் சல்மோன் சசிந்த

(மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி, ஆண்டு 12 வர்த்தகப் பிரிவு மாணவன்)

*தம்பி உன் நினைவுகள்*
*ஓடையாக*
*கனவிலும் சலசலத்து*
*ஓடுகின்றன!*
*அதன் கரைகளில் துடித்துப்*
*படிந்த துயரங்களை ஆற்ற நீ*
*வருவாயா!*
*எங்கள் நண்பனின் சகோதரனே!*

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆண்டு 13 கலைப்பிரிவு மாணவர்கள்
மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி Advt.

# வணிகமும் இன்றைய போக்குகளும்

கே.கே.அரஸ்

கிழக்கிலங்கை முன்னணி பிரபல ஆசிரியர் - வணிகக்கல்வி
BRILLIANT - KALMUNAI, BATTICALOA
IDEAL - AKKARAIPATTU

## வணிகம்

மனிதத்தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்து கொள்வதற்காக இலாபம் பெறும் நோக்கில் அவசியமான பொருட்கள் சேவைகளின் உற்பத்தி, பங்கீடு, சந்தைப்படுத்தல், துணைச்சேவைகள் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய செயற்பாடு வணிகம் எனப்படும்.

### வணிகத்தின் பிரதான தொழிற்பாடுகள

1. இயக்கச் செயற்பாடு - உற்பத்தி
2. துணைச் செயற்பாடு - கொள்வனவு, சந்தைப்படுத்தல், பங்கீடு, ஆளணி, நிதியும் கணக்கீடு, முகாமை

### வணிகத்தின் வரலாற்று ரீதியான அபிவிருத்திக் கட்டங்கள்

1. பண்டமாற்று முறை / வியாபாரம் :- பொருட்கள் சேவைகளுக்கு பதிலாக பொருட்கள் சேவைகளை பரிமாற்றுதல்.
2. பணப்பரிமாற்ற முறை :- பொருட்கள் சேவைகள் பணத்தை பயன்படுத்தி பரிமாற்றப்படல்.
3. கைத்தொழில் புரட்சி :- மனிதனது இரண்டு கைகளினதும் சக்திக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய விளைந்தமை.
4. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி :- E - Business, E - Mail வளர்ச்சியினால் இலத்திரனியல் முறையில் வர்த்தக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### E - Business E - வணிகம்

### இலத்திரனியல் வணிகம்

### மின்னியல் வாணிபம்

சர்வதேச ரீதியாக வலைப்பின்னலை ஏற்படுத்திய இன்ரநெற் மூலம் பொருள் கொள்வனவு விற்பனை செய்யும் முறையே E - வணிகம் எனப்படும்.

### இலத்திரனியல் தபால் E - ஆயடை

சர்வதேச வலைப்பின்னல் வேலைத் திட்டத்தின் கீழ் கணனி மூலம் வேறோர் கணனிக்கு தகவல்கள், கடிதங்களை பரிமாற்றம் செய்யும் முறை இலத்திரனியல் தபால் எனப்படும்

### இலத்திரனியல் தபால் தொழிற்பாட்டு முறை.

இலத்திரனியல் அஞ்சல் மூலம் தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்வதற்கு தகவல் அனுப்புவோரது இலக்கத்தை தகவல் பெறுபவரும் தகவல் பெறுபவரின் இலக்கத்தை தகவல் அனுப்புவோரும் தெரிந்திருத்தல் வேண்டும். கணனியில் தகவல் பெற வேண்டியவரது இலக்கத்தை தகவல் அனுப்புபவர் முதலில் தட்டி அதன் பின் தகவலையும் தட்ட வேண்டும். அப்போது அது மொடம் [ Modern ] என்ற கருவியின் வழியாக பயினிக்கின்றது. அக் கருவி தொலைபேசி வலையமைப்பின் ஊடாக Internet உடன் கணனியை இணைக்கின்றது. தகவலும் பெற வேண்டியவருது கொம்பியூட்டரை சென்றடையும். குறித்த Computer இற்கு உரிய நபர் மின்னனு தபால் பெட்டியினை பார்வையிடும் போது தகவலை கண்டு பிடிப்பார்,

### E - Mail இல் காணப்படும் நன்மைகள்.

01. ஒப்பிடளவில் (Fax, Telex என்பவற்றை விட) மிகக் குறைந்த செலவில் அனுப்பலாம்.
02. மிக விரைவான முறையில் தகவலை பரிமாற்றலாம்.
03. தகவலின் இரகசியத் தன்மை பேணப்படும்.
04. ஒரே தகவலை ஒரே நேரத்தில் பல்வேறு நபர்களுபக்கு / நிறுவனங்களுக்கு அறிவிக்கலாம்.
05. கணனி பயன்பாடு கிரமமாக உலகின் எந்த பகுதிக்கும் இதன் மூலம் அனுப்பவும் பெறவும் முடியும்.ட

### எதிர்வர்த்தகம். (Counter Trade)

அந்நிய செலவாணி பற்றாக்குறையாகவுள்ள நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுதல் எதிர்வர்த்தகம் எனப்படும்.
இந்நாடுகள் சர்வதேச வர்த்தகத்தை பல்வேறு முறைகளில் மேற்கொள்ளலாம். அவையாவன.

- பண்ட பரிமாற்ற முறை
- பெறுமதியில் ஒரு பகுதியை பணவடிவிலும், மிகுதி தொகையை பொருள் வடிவிலும் கொடுத்து தீர்த்தல்.
- பொருட்களுக்கு வழங்கப்படும் பணத்தினை அந்நாட்டிலேயே செலவு செய்ய வேண்டும். (பொருட் கொள்வனவு மூலம்)

### வணிகத்தின் பிரதான புதிய போக்குகள்

1. பூகோள மயமாக்கல் / உலக மயமாக்கம். :-
2. தொழில் நுட்ப முன்னேற்றம் :-கணனி, உற்பத்தி, தொழில் நுட்பம், போக்குவரத்து, E - வணிகம் போன்றவற்றின் விருத்தி காரணமாக வர்த்தகம் இலகுவாதல்.
3. சூழல் பிரச்சினைகளும் வியாபார ஒழுக்கங்களும்:- வியாபார சூழலுக்கு தீங்கு விளைவிக்கா முறையிலும் சமூகத்துக்கு நன்மை பயக்கக் கூடிய வகையிலும் செயற்படலும் வியாபார ஒழுக்கங்களை பின்பற்றலும்.
4. வாடிக்கையாளர் பலம் :- தொடர்பாடல் முன்னேற்றம் போன்றவற்றால் விழிப்பணர்வு ஏற்பட்டு வாடிக்கையாளர் மத்தியில் உறவு காணப்படல்.
5. உயர் போட்டித்தன்மை :- பரந்த சந்தை காரணமாக பல்வேறுபட்ட பொருடகள் சந்தைக்கு வந்தமையால் பொருட்கள் விற்பனையில் போட்டி காணப்படல்.

### பூகோளமயமாக்கல் அல்லது உலகமயமாக்கல்

உலகம் முழுவதும் ஒரு சந்தை என்றடிப்படையில் வியாபார தடைகள் நீக்கப்பட்டு செயற்படல் பூகோளமயமாக்கல் எனப்படும்.

### உலகமயமாதலின் அனுகூலங்கள்.

1. வளர்முக நாடுகள் பெருமளவு பிறநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாய் இருத்தல்.
2. நவீன தொழில் நுட்பங்களை உடனுக்குடன் பெற முடிதல்.
3. வளர்முக நாடுகளின் உற்பத்திறன் அதிகரித்தல்.
4. உள்நாட்டின் தொழில் வாய்ப்பு மட்டம் உயர்வடைதல்.
5. மலிவான விலையில் பொருட்களையும் சேவைகளினையும் நுகரக் கூடியதாய் இருத்தல்.

### உலகமயமாதலின் பிரதி கூலங்கள

1. வளர்முக நாடுகளில் வளர்ந்து வரும் இளம் பருவக் கைத்தொழில்கள் பாதிப்படைதல்.
2. வளர்முக நாடுகள் பொதுவாகவே சார்பு நிலைப் பொருளாதாரங்களாகக் காணப்படுகின்றன. உலகமயமாதலின் காரணமாக இத்தகைய சார்புப் பொருளாதார நிலை மேலும் பலவீனப்படுத்தப்படல்.
3. பல்தேசியக் கம்பனிகளின் மேலாதிக்க வாதத்துக்கு உட்பட வேண்டியிருத்தல்.
4. நாட்டிற்குப் பொருத்தமற்ற தொழிநுட்பங்களும் முதற் சொத்துக்களும் இறக்குமதி செய்யப்படல்.
5. வளர்முக நாடுகள் பாரியளவினான வர்த்தக சென்மதி நிலுவைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி இருத்தல்.

### பிராந்தியமயமாதல் Regionalisation

பிராந்திய மயமாதல் எனப்படுவது குறிப்பிட்ட சில குறிக்கோள்களின் அடிப்படையில் ஒரே புவியியல் எல்லைக்குள் அல்லது குறிப்பிட்ட சமூக அமைப்பில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அரசுகள் ஒன்றிணைந்து கூடியளவு நலன்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சமூக பொருளாதார அரசியல் உறவு (Integration) முறைகளை ஏற்படுத்திக் கொள்வதன் பொருட்டு உருவாக்கப்படும் ஒரு அமைப்பு அல்லது ஏற்பாடு ஆகும்.

Eg : பாதுகாப்பு நோக்கமாக ஏற்படுத்தப்பட்ட வட அத்திலாந்திப் பாதுகாப்பு அமையம் (NATO) அரசியல் நோக்கமாக ஏற்படுத்தப்பட்ட ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பு (EEC) போன்ற பிராந்திய அமைப்புக்களைக் குறிப்பிடலாம்.

### உலக வர்த்தக அமைப்பு (W.T.O)

**The World Trade Organizati on.**

உலகளாவிய வர்த்தக முறை வளர்ச்சியடைய ஆரம்பித்ததனைத் தொடர்ந்து நாடுகள் தேசிய ரீதியிலான வர்த்தக முறையிலிருந்தும் படிப்படியாக விடுபட்டு சர்வதேச வர்த்தக முறைக்குள் பிரவேசிக்க ஆரம்பித்தன. இத்தகைய ஒரு பின்னணியில் பாதுகாப்பான வர்த்தக முறையொன்றினை உருவாக்குவதற்கான பொது உடன்படிக்கையொன்றினை ஏற்படுத்திக் கொள்ளவும் தீர்வைகள் மற்றும் இறுப்புக்கள் சம்பந்தமான பொதுக் கொள் கையினை வகுத்துக் கொள் ளவும் என " வர்த்தகம் இறுப்பு என்பவற்றுக்கான பொது உடன்படிக்கை " (Genaral Agreement of Tariff and Trade) ( GATT) ஆரம்பிக்கப்பட்டது.

இத்தகைய கெட் (GATT) அமைப்பிற்கும் சர்வதேச வர்த்தகத் தொடர்பாடல் அமைப்புக்களுக்கும் (International Trade Negotions) இடையில் 1986ம் ஆண்டு ஆரம்பமான உருகுவே வட்டப் பேச்சுவார்த்தை (Uruguary rornd) உலக வர்த்தக அமைப்பு தோற்றமெடுப்பதற்கான அடிப்படையாக அமைந்திருந்தது. மேலும் 8 சுற்றுக்காளாக மிக நீண்டகாலம் நடை பெற்ற இப்பேச்சுவார்த்தை 1994ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் மொறோக்கோவில் நடை பெற்ற அமைச்சு மட்டப் பேச்சுவார்த் தைகளோடு நிறைவு பெற்றது. இப்பேச்சுவார்த்தையின் பயனாக உருவான முக்கியமான ஒரு அமைப்பே " உலக வர்த்தக அமைப்பு " ஆகும். இதனைத் தொடர்ந்து " வர்த்தகம் இறுப்பு என்பவற்றுக்கான பொது உடன்படிக்கை " ( GATT) காலாவதியானது. அத்துடன் இதுவரை கெட் அமைப்பில் அங்கத்துவம் பெற்றிருந்த அனைத்து நாடுகளும் உலக வர்த்தக அமைப்பில் சேர்ந்து கொண்டன.

உலக வர்த்தக அமைப்பு உருகுவே வட்டப் பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட "அனைத்து தரப்பினரதும் வர்த்தக உடன்படிக்கை" (Multilataral Agreement) யின்படி பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

- வர்த்தகத்தைத் தாராள மயப்படுத்துவதன் மூலம் அபிருத்தியினைத் துரிதப் படுத்துதல்
- நாடுகளின் பொருளாதாரச் சூழல்களைப் பாதுகாத்தல்
- உலக வர்த்தக நடவடிக் கைகளைப் பன்முகப்ப டுத்துதல்
- நாடுகளுக்கிடையே ஒருமைப்பாட்டினைப் பேணுதல்.




# அக்கரைப்பற்றில் சாரணர் பாசறை

(முபா)

கடந்த வாரம் அக்கரைப்பற்று மத்திய கல்லூரியில் மூன்று நாள் பயிற்சிப் பாசறை ஒன்று இடம்பெற்றது. இதில் ஆறு பாடசாலைகளைச் சேர்ந்த 200 சாரணர்கள் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி. எம்.தௌபீக், மாவட்ட ஆணையாளர் யூ.எல்.எம்.ஹாசிம், விரிவுரையாளர் எம்.ஐ. எம்.முஸ்தபா, அதிபர் ஏ.அஸீஸ், பிரதி சாரணிய பணிப்பாளர் ரி.தர்மலிங்கம் உட்படப் பலரும் கலந்து சிறப்பித்தனர். பின்வரும் சாரணர்கள் இதில் பரிசு பெற்றனர்.

*கால் நடைப்பயணம்*
1. ஏ.எச்.எம்.பவுமி
2. ஏ.ஜி.எம்.ஜெசீர.
3. யூ.எல்.எம்.சிபான்
4. சப்ராஸ் முகம்மத்

*வினாப்போட்டி*
எம்.ஹலீம்

*முகாம் பரிசோதனை*
நிந்தவூர் அல்மதினா
நிந்தவூர் அல் அஸ்ரக்

*பாடல்:*
அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ்
அக்கரைப்பற்று மத்திய கல்லூரி

*சிறந்த சாரணர்கள்*
எம். ஐ.இபாம்
எம்.இல்யாஸ்
எம்.சகாப்தீன்

## றூமி இளைஞர் கழகம் சம்பியன்

(அட்டாளைச்சேனை நிருபர் எம்.ஏ.றமீஸ்)

தேசிய இளைஞர் மன்றத்தினால் பிரதேச ரீதியாக நடாத்தப்பட்டு வரும் விளையாட்டு போட்டி சென்ற 25ஆம் திகதி பிரதேச சம்மேளனத் தலைவரும், மாவட்ட சம்மேளனத் தலைவரும், நிஸ்கோ பணிப்பாளருமான எம்.எஸ்.எம். ஜ.்.பர் தலைமையில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச அலுவலகத்திற்குட்பட்ட பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி, ஆலங்குளம், தீகவாபி ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள,முஸ்லிம் இளைஞர் கழகங்கள் சுமார் 32 பங்கு கொண்டன. இதில் அட்டாள்ளைச்சேனை றூமி இளைஞர் கழகம் சம்பியனாக தெரிவானது.

# சார்ஜா போட்டியில் பங்கேற்பு இந்தியாவிடமிருந்து பதில் இல்லை:

## சார்ஜா அமைப்பாளர் தகவல்

(துபாய்)

சார்ஜா போட்டியில் இந்தியா பங்கேற்பது குறித்து அதிகார பூர்வமாக இதுவரை எந்த விதமான தகவலும் இல்லை என்று சார்ஜா கிரிக்கெட் அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

அடுத்த மாதம் சார்ஜாவில் நடைபெற உள்ள மூன்று நாடுகளுக்கிடையேயான போட்டியில் பங்கேற்பது குறித்து இந்தியாவிடமிருந்து இதுவரை எந்தவிதமான தகவலும் வரவில்லை என்று கிரிக்கெட் வீரர்கள் நலநிதி தொடர் (சி.பி.எப். எஸ்.) தலைமை நிர்வாகியான ஜாகிட் நூரனி தெரிவித்தார்.

மேலும், சி.பி.எப்.எஸ்சிற்கும் பி.சி.சி.ஐக்கும் இடையே ஒப்பந்தம் இருக்கிறது. எனவே இந்தியாவிடமிருந்து இறுதி முடிவு வரும்வரை, அடுத்த முடிவை மேற்கொள்ள முடியாது என்றார் நூரனி.

சார்ஜா போட்டி குறித்து இந்தியா இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்று எங்களுக்கு தகவல் கிடைத்திருக்கிறது. எனவே நாங்கள் காத்திருப்பதை தவிர வேறு வழியில்லை என்றார் நூரனி.

சார்ஜா போட்டியின் ஒருங்கிணைப்பாளரான அப்துல் ரெஜ்மான் புக்தியார், சமீபத்தில் புதுடெல்லிக்கு வந்து, அரசு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தியா பங்கேற்காத பட்சத்தில் நியூசிலாந்து அல்லது வங்கதேச அணி கலந்து கொள்ளுமா என்று கேட்டபோது, இந்தியா இப்போட்டியில் கலந்து கொள்ளும் என்று உறுதியாக நம்புகிறோம், பி.சி.சி.ஐயின் பதிலுக்காக காத்திருக்கிறோம் என்று நூரணி கூறினார்.

## 3வது ஒருநாள் போட்டி ராகுல் டிராவிட் பங்கேற்பாரா?

(புனே)

இந்திய கிரிக்கெட் அணியின் துணைக் கேப்டனான ராகுல் டிராவிட், நாளை நடைபெற உள்ள 3-வது ஒருநாள் போட்டியில் ஆடுவது கேள்விக்குறியாகி உள்ளது.

புனே நகரில் நடைபெற்ற 2-வது ஒருநாள் போட்டியில், அவருக்கு நாடியில் காயம் ஏற்பட்டது.

இது அவருக்கு வீக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. தற்போது அவர் சிகிச்சை எடுத்துவருகிறார். அவரை தீவிரமாக கண்காணித்து வருவதாக பயிற்சியாளர் ஜான் ரைட் குறிப்பிட்டார்.

எனவே நாளை (31-ம் தேதி) இந்தூரில் நடைபெற உள்ள ஒருநாள் போட்டியில் அவர் பங்கேற்பது நாளை தான் முடிவு செய்யப்படும்.

# இப்போது நான் பெண்கள் பக்கம் திரும்பிப் பார்ப்பதில்லை:

## கங்குலி பேட்டி

(பெங்களூர்)

இப்போது நான் பெண்கள் பக்கம் திரும்பி கூட பார்ப்பதில்லை என இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் கஙகுலி கூறினார்.

பெங்களூர் சின்னசாமி கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில் ஆஸ்திரேலியா அணிக்கும், இந்திய அணிக்கும் ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடந்தது. இந்த போட்டியில் இந்தியா 60 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

போட்டியின் முடிவில் கங்குலி நிருபருக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

சின்னசாமி கிரிக்கெட் விளையாட்டு மைதானம் ரன்களை இந்தியாவிற்கு வாரி வழங்கும் தன்மையை கொண்டது. அதனால் 315 ரன்கள் எடுத்து இருந்தபோதிலும் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையே எனக்கு இல்லை. பெவனும், ஹைடனும் அவுட்டானது தான் ஆட்டத்தின் திருப்பு முனையாக அமைந்தது.

### அணி ஜெயித்தது

பெங்களூர் மைதானம் ஈரமாக இருந்ததால் பந்தை கிரிப் செய்வதில் பிரச்சினை ஏற்பட்டது. இருந்தாலும் நம்து வீரர்கள் நன்றாக பீல்டிங் செய்தனர். முக்கியமாக இளம் வீரர்களுக்குத் தான் எல்லா பாராட்டுகளும் சேர வேண்டும். நான் நன்றாக ஆடுகிறேனோ இல்லையோ என்பதை விட நம் அணி ஜெயித்தது என் பது தான் முக்கியம்.

### பெண்கள் பக்கம் ...

நான் பாமில்தான் இருக்கிறேன். கூடிய விரைவில் என்னுடைய வழக்கமாக ஆட்டத்திற்கு திரும்புவேன். பேட்டியின்போது சின்ன சாமி விளையாட்டு மைதானத்தில் புதியதாக துவஙகப்பட்டுள்ள பெண்கள் கேலரி குறித்து கேட்ட போது, இப்போதெல்லாம் நான் பெண்கள் பக்கம் திரும்பி கூட பார்ப்பதில்லை என கூறினார்.

# வாசகர் நெஞ்சம்

## அது உண்மையல்ல!

**29.03.2001** அன்று 'வாசகர் நெஞ்சம்' என்னும் பகுதியில் களுவாஞ்சிகுடி சாலையின் அவலநிலை என்ற தலைப்பின் கீழ் வந்த கடிதம் முற்றிலும் தனிப்பிட்ட குரோதம் காரணமாக எழுதப்பட்டதாகவே கருதவேண்டும். களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த சதீஸ் என்பவர் எழுதியிருந்தார். இச்சாலையில் கொடுப்பனவுகளும் ஏனைய அத்தியாவசிய சேவைகளும் ஒழுங்கான முறையில் நடைபெறுகின்றன என்பதை டி.எஸ். ஆகிய கருணாகரம்பிள்ளை அவர்களும் அங்கு வேலை செய்யும் ஊழியர்களும் தெரிவிக்கின்றார்கள். குரோதம் காரணமாக டி.எஸ்.ஸை அவமானப்படுத்துவது அவரை மட்டுமல்ல அந்த ஸ்தாபனத்தையும் அங்கு வேலை செய்யும் ஊழியர்களையும் அவமானப்படுத்துவதற்கு சமமானதாகும். எனவே, இச் சதீஸ் என்ற தனிப்பட்ட நபரை சட்டத்தின் முன்னிலையில் நிலை நிறுத்த டி.எஸ். ஆகிய கருணாகரம்பிள்ளை ஆலோசனை செய்து வருகின்றார் என்பதை எங்களுக்கு தெரிவித்தார்.

**எஸ்.கே.**
**நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி**
**களுவாஞ்சிகுடி**

## நன்னீர் மீன் வளர்ப்பு

மேற்படி விஷயம் சம்பந்தமாக என்னால் வழங்கப்பட்ட பேட்டி தொடர்பாக தங்கள் பத்திரிகை வாசகரின் கருத்துப் பரிமாற்றத்திற்கு களம் அமைத்து கொடுத்திருந்தது. கருத்து பரிமாற்றத்தினால் ஒரு 'தெளிவு' ஏற்படுவது இயற்கை. இதனால் எமது பணியான விரிவாக்கமும், அபிவிருத்தியும் நிறைவேற்றப்படுகிறது.

போட்டியாளரின் பணி பிரசுரிக்கப்படும் வரை நான் எனது கருத்தினைக் கூற பொறுத்திருந்தேன்.

தடாக மீன் வளர்ப்பில் ஒரு மீன் 6-8 மாத காலத்தில் 1 1/2, 2 கிலோ நிறை வளர்ச்சி அடையும் என்று கூறியிருந்தேன். அத்தோடு "றோகு" மீன் தடாக மீன் வளர்ப்பில் இயற்கையாக இனம் பெருக்காது என்றும் கூறியிருந்தேன்.

செய்கணையான் என்று எமது மாவட்ட மக்களால் அழைக்கப்டும் மீன் றோகு மீனாகும். (லிபியோ றொகிட்டா) கணையான் என்று அழைக்கப்படுவது லிபியோ, துஸ்ஸு மேரா. தயவு செய்து வாசகர்கள் இவையிரண்டும் ஒன்றென கருத வேண்டாம்.

**எஸ்.தவபாலரட்ணம்**
**ஏ.ஈ.ஓ**
**மட்டக்களப்பு.**

## கட்டணத்தைக் குறையுங்கள்

களுவாஞ்சிகுடி பகுதியில் பல கஷ்டங்களின் மத்தியிலும் பிள்ளைகளை படிப்பிப்பதிலும் பெற்றோர்கள் ஆர்வம் காட்டிவருவது வரவேற்கத்தக்கது. இதற்கு இம்முறை வெளியான ஜீ.சி.ஈ, ஜீ.ஏ.கியூ முடிவுகள் சான்று பகர்வதாக உள்ளது.

இதற்கு தனியார் கல்வி நிலையங்களின் பங்களிப்பும் முக்கியமானது. இருப்பினும் சில தனியார் கல்வி நிலையம் இவ்வாண்டு தொடக்கம் திடீரென வகுப்புக்களுக்கான கட்டணத்தை உயர்த்தியுள்ளது.

இது பொருளாதார கஷ்டத்தில் வாழும் பெற்றோர்களின் பிள்ளைகளின் கல்வியை பாதிக்கக் கூடியது. எனவே, சம்பந்தப்பட்ட கல்வி நிலையமும் ஆசிரியர்களும் இம் மாணவர்களின் முன்னேற்றத்துக்கு உதவுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

**பெற்றோர்கள்**
**களுவாஞ்சிகுடி**

## புலன்வலு இழந்தோருக்கான விளையாட்டுப் போட்டி

கல்வி, கலாசாரம், விளையாட்டு ஆகிய துறைகளில் ஆர்வமுள்ளவர்களை ஒன்றிணைத்து அத்துறைகளினூடே பிறருக்கு உதவும் நோக்குடன் ஒருவருட காலத்திற்கு மேலாக செயற்பட்டு வரும் கதிர்கள் அமைப்பு "புலன் வலு இழந்தவர்களுக்கான" விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சி ஒன்றை மட்/இந்துக்கல்லூரி மைதானத்தில் நாளை ஏப்ரல் முதலாம் திகதி காலை முதல் ஒருநாள் நிகழ்வாக நடாத்தவுள்ளது.

இந்நிகழ்வில் "தரிசனம்" கட்புலன் வலுவற்றோர் பாடசாலை "வாழ்வோசை" செவிப்புலன் வலுவற்றோர் பாடசாலை, மற்றும் மட்டக்களப்பு, திருமலை, கல்முனையைச் சேர்ந்த செவிப்புலனற்றவர்களின் சமூகம் போன்றன பிரதான புங்களிப்பைச் செலுத்தவுள்ளன.

இந்நிகழ்ச்சிகளில் சிறப்பு நிகழ்ச்சியாக "வாழ்வோசை" செவிப்புலன் இழந்தோர் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்ச்சி இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஆர்வமுடைய அமைப்புக்களைச் சாராத ஏனைய "புலன் வலு இழந்தவர்களும்" நாளை முதல் திகதியில் மைதானத்துக்கு சமூகமளித்து பெயர்களைப் பதிவு செய்து கொள்வதனூடாக நிகழ்ச்சிகளில் புங்கு பற்றலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

**கலாசார பிரிவு இணைப்பாளர்**

# திருமலையில் ஆசிரியர் சங்க மாநாடு 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

(எஸ்.எஸ்.குமார்)

**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 27வது எழுச்சி மகாநாடு நேற்று கோலாகலமாகத் திருக்கோணமலையில் ஆரம்பமானது. காலை 8.30 மணிக்கு ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இருந்து அதிதிகள் புனிதமரியாள் கல்லூரி விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டனர்.**

சங்கத்தின் 500 ற்கும் மேற்பட்ட ஆசிரிய அங்கத்த வர்கள் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இருந்து புனித மரியாள் கல்லூரிக்கு ஊர்வல மாகச் சென்றனர்.

வடக்குக் கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலத்துறை மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் செ.அமிர் தலிங்கம், ஜேர்மன் பிரடறிக் ஈபேர்ட் மன்றத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டீற்மர் நைற்செல் ஆகியோர் முதன்மை விருந்தினராகவும் வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் இ.சிவானந்தன், திருகோணமலை வலயக் கல்விப்பணிப்பாளர் கு.திலகரெத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் சி.குமரகுரு தாசன் தலைமையில் எழுச்சி மகாநாடு நடைபெற்றது. முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட ஜேர்மன் பிரடறிக் ஈபேர்ட் மன்றத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டீற்மர் நைற்செல் அங்கு உரையாற்று கையில், இலங்கையில் தொழிற் சங்கங்களில் பெண்களின் பங்களிப்பு மிகக்குறைவாகவே உள்ளது. ஆண்களால் இது ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. இது தொழிற் சங்கங்களின் வளர்ச்சியைக் குறைப்பதாகவே இருக்கிறது. இந் நிலமையை நீக்க நாம் 3 வருடங்களாக பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என்றார்.




வடக்குக் கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலத் துறைமகளிர் விவகார அமைச்சின் செயலாளர் செ.அமிர்தலிங்கம், அங்கு உரையாற்றுகையில் ஆசிரியப் பணி என்பது சலுகைகளுக்காக சங்கங்கள் அமைப்பது அல்ல. சலுகைகள் உரிமைகளுக்காக தொழில் சங்கங்கள் தேவை. நிர்வாகத்தை நகர வைப்பதற்கு தொழிற் சங்கங்கள் தேவை என்றார்.

## சிறுவனை மீட்டுத்தருமாறு தாயும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரும் மனுத்தாக்கல்

(கமலதாசன்)

கடந்த ஒன்றரை வருடங்களாக சித்திரவதைக்கும் கஷ்டங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து வரும் தனது மகனை மீட்டுத்தருமாறு தாயும், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரும். மட்டக்களப்பு நீதிமன்றத்தில் கடந்த 28ம்திகதி மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் பெரியவெளி மல்லிகைத் தீவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கற்பகம் என்னும் குடும்பப்பெண் வறுமையின் காரணமாக தனது எட்டு வயது மகனை கணவருடன் விட்டு வெளிநாடு சென்றுள்ளார். கணவா மகனை களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த தேவராணி சற்குணம் என்பவருக்கு விற்றுள்ளா். மனைவி வெளிநாட்டில் இருந்து வந்தவுடன் குறிப்பிட்ட வீட்டிற்கு குறுமன்வெளி சனசமூக நிலையத்தின் கிராம சேவகர் ஆகியோருடன் சென்ற சமயம் சிறுவன் கரிபூசிய உடைகளுடன் காணப்பட்டதாகவும், வீட்டில் சமையல் பாத்திரங்கள் கழுவுவது, மாடு மேய்ப்பது, ஆடை தோய்ப்பது போன்ற வேலைகளில் இச்சிறுவனை பயன்படுத்துவது தெரிய வந்தது. சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரும், தாயும் இச்சிறுவனைக் கேட்ட போது ரூபா பத்தாயிரம் கேட்டாராம். அதைக் கொண்டு சென்ற போது பதினையாயிரம் ரூபாவும், பின்பு இருபதினாயிரம் ரூபாவும் கேட்டாராம். அப்போதும் சிறுவனைக் கொடுக்காததால் இது சம்பந்தமாக சிறுவர் நன்னடத்தை உத்தியோத்தரும், தாயும் நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்தனர். நீதிபதி ஏ.எல். அப்துல் கபூர் வழக்கை 24.4.2001 க்கு ஒத்திவைத்தார்.

## தந்தை செல்வா 103ஆவது நினைவு தினம்

(யாழ் நிருபர்)

தந்தை செல்வாவின் 103 ஆவது நினைவு தினம் இன்று யாழ் நகரில் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ் நகரில் உள்ள தந்தை செல்வா நினைவுத் துாபிக்கு அருகாமையில் ஞாபகார்த்த சதுக்கம் ஒன்றும் இன்று காலை திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டள்ளது. இவ்வைபவங்களில் கலந்து கொள்வதற்காக கொழும்பில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய உறுப்பினர்கள் யாழ் நகர் வந்துள்ளனர்.

## மன்னார்....

தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில், கூட்டத்தினரிடையே உரையாற்றிய மாணவர் ஒருவர் இங்கே பாரம்பரிய கலைகளைப் பேணுவதற்கான ஒரு முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதேசமயம் எமது கலாசாரத்தைப் பேணிப்பாது காக்கவும் நாம் போராட வேண்டும். எமது பெண்கள் இவ்வாறு நிர்வாணப்படுத்தப்பட்டு அவமரியாதைக்கு உட்படுத்தப்படுவதை தொடர்ந்தும் நாம் அனுமதிக்கக் கூடாது என்று கூறினார்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தின் போது கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தினரின் துண்டுப்பிரசுமுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டது. அத்துண்டுப்பிரசுரத்தில் பெண்கள் கைது செய்யப்படும் போதும், விசாரணை செய்யும் போதும் பெண் பொலிசார் உடன் இருக்க வேண்டும் என்பது விதியாக இருந்த போதும், மிருகத்தனம் கொண்ட பொலிசாரால் இதனைப் பின்பற்றாது இரு பெண்களையும் நிர்வாணப்படுத்தி பாலியல் இம்சை புரிந்துள்ளனர்.

### ''சிந்தனைக் கோமா''

பேரினவாத அரசு தொடுத்துள்ள யுத்தம் தமிழ் பேசும் மக்களின் உயிர் உடமைகள் மீது மாத்திரமன்றி சுயமரியாதை தன்மானம் என்பவற்றின் மீது தொடுக்கப்பட்டுள்ள யுத்தம். இதன் மூலம் தமிழ் மக்களை "சிந்தனைக் கோமாவில்" வைத்திருபதில் அரசு வெற்றி கண்டுள்ளது. இதிலிருந்து எம்மை நாம் மீட்கப் போராட வேண்டும்.

### வரலாற்றுக் கண்டனம்

எம் மக்கள் மீது காட்டுமிராண்டித் தனமும் மிலேச்சத்தனமும் கட்டவிழ்த்து விடப்படும் போது சமூக உணர்வு மையங்களாகிய பல்கலைக்கழக் சமூகங்கள் உயர் கல்வி நிறுவனங்கள், பாடசாலை சமூகங்கள்,பத்திரிகைத்துறையினர் , அரசசார்பற்ற முற்போக்கு நிறுவனங்கள் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். நிறுவனமயப்படுத்தப் பட்டுள்ள அரச பயங்கர வாதத்தின் காட்டுமிராண்டித்தனங்களை சர்வதேச சமூகத்திற்கும், எம்மத்தியில் துாங்குபவர்களாக நடிப்பவர்களுக்கும் இது எமது வரலாற்றுக் கடமை.

என அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன்னிக்கான பொருட்களின் தடையைக் குறைக்க நடவடிக்கை

(நமது நிருபர்)

வன்னிக்கு அனுப்பும் பொருட்களின் கட்டுப்பாடுகளில் தளர்வை ஏற்படுத்தப் போவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் அரிசி, பருப்பு, மண்ணெண்ணை போன்ற வீட்டுப்பாவனைப் பொருட்களின் அளவை அதிகரிப்பதுடன் விலையையும் குறைத்த விற்பதற்கு வசதி செய்து கொடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சு ஆரம்பமாவதற்கு முன்னர் ஒரு சமாதான நல்லெண்ண முயற்சியாக இந்த தளர்வை ஏற்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

## வான் மோதி கல்லூரி மாணவன் மரணம்!



(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் மாணவன் நவயோகானந்தம் சசிக்காந்(18) நேற்று முன்தினம் தன்னாமுனையில் இடம்பெற்ற வான் விபத்தில் மரணமானார்.

முதலாம் வருட வர்த்தகப் பிரிவு மாணவரான இவர் பாடசாலையில் நடைபெற்ற தவணைப் பரீட்சையை எழுதி விட்டு தன்னாமுனையிலுள்ள தனது வீட்டிற்கு பேரூந்தில் சென்று குறித்த இடத்தில் இறங்கிய போது பின்புறமாக வந்த மோட்டார் வான் மோதியதனால் தலை, கை, தோள் போன்ற பகுதிகளில் பலத்த காயமடைந்த நிலையில் வைத்திய சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமடைந்தார்.மேற்படி 51-1498 இலக்கமுடைய வானும், சாரதியும் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்டுகின்றது.

## மாகாண சபை ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரிக்கை!

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் விளையாட்டுத்துறை அமைச்சின் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த எஸ்.கமலநாதன் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். மட்டக்களப்பு அமைப்பாளர் இரா.துரைரெட்ணம் கல்வி அமைச்சின் செயலாளர், ஆளுநர் மற்றுழ் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாது பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பணிப்பாளர் எஸ். கமலநாதன் நேர்மையானவர். இரவு பகல் பாராது சேவை மனப்பாங்குடன் வடக்கு கிழக்கு மக்களுக்கு திறம்பட சேவையாற்றி வருபவர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பார்வையாளர்.......

ஆண்டுகளுக்கு முன்னர் பேராசிரியர் வித்தியானந்தனால் தயாரித்து மேடையேற்றப்பட்ட ''இராவணேசன்'' கூத்து, 30 ஆண்டுகளுக்குப் பின்னர் வடமோடி நாடகமாக போராசியர் மௌன குருவினால் தயாரித்தளிக்கப் பட்டிருக்கிறது.

பாரம்பரியக் கூத்து ஆடல் பாடல் முறைகளுடன் நாடகத்து க்குத் தேவையான நடிப்பு முறை கள் வளர்த் தெடுக்கப்பட்டு நவீன அரங்குக் குரிய காட்சியமைப் புக்களுடன் ''இராவணேசன்'' உருவாக்கப் பட்டிருந்தது. நேற்றைய நிகழ்வில் மணடபம் நிறைந்த பார்வையாளர்கள், தயாரிப்பாளர்களை பாராட்டிச் சென்றதை காண முடிந்தது.

## யாழ் செய்தியாளர்....

செய்தியாளர் சுப்பிரமணியம் திருச்செல்வம் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

செய்தியாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்த இவர் கொழும்புக்குச் சென்ற வேளையில் வெள்ளவத்தையில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவி புரிந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டார்.

நேற்று கோட்டை நீதவான் பிரியந்த பெரேரா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது இவருடைய குற்றத்தை நிருபிக்க போதிய சாட்சியம் இல்லாத காரணத்தினால் நீதவானால் இவர் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

## இடைக்கால தடை உத்தரவு!

(எஸ்.கமலதாஸன்)

மட்டக்களப்பு மாவட்ட கிறிக்கட் கழகத்தின் முன்னாள் உபதலைவர் விவேகானந்தா பிரதீபன் மட்டு மாவட்ட நீதிமன்றத்தில் 25 பேருக்கு எதிரான வழக்கொன்றை நேற்று முன் தினம் தாக்கல் செய்துள்ளார்.

இது பற்றித் தெரிய வருவதாவது கடந்த 17.12.2000ம் அன்று நடைபெற்ற கூட்டத்தில் பல ஊழல் துஸ்பிரயோகங்கள் செய்துள்ளதாகவும் இன்றைய கூட்டம் ஒழுங்கு விதிகளுக் கமைய கூட்டப்படவில்லை என்பதோடு இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முறையற்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஓட்டமாவடி.........

சுமார் ஆயிரம் பேர் இதில் கலந்து கொண்டனர் இறுதியில் கொடும்பாவியொன்றும் எரிக்கப்பட்டது.

பிரதியமைச்சரின் அரசியல் நடவடிக்கையினை விமர்சித்துள்ளவர்களை கண்டிறிய வேண்டும் என்பது ஆர்பாட்டக் காரர்களின் கோரிக்கையாகும்.

இப்பத்திரிகை வேலா ஷொயிஸ பாலிகே ப நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.